**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.313/2018**

**CNR.No.TNCB19000**

Date: 08.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | செல்வராஜ் | **வயது** | 57 |
| **த/பெ** | ராமசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 8th July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் விடுபட்டுபோன இடத்தில் பட்டா கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கில் பட்டா கேட்பதற்கு 4-ம் பிரதிவாதியை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் ஏற்கனவே அவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவரையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4ம் பிரதிவாதிக்கெதிராக என்ன கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தாவா சொத்தில் அவர் உபயோகத்தில் இருப்பதாக சொன்னதால் அவருக்கெதிராகவும் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் தற்போது யார் இருக்கிறார்கள் என்றால் எங்களது உபயோகத்தில் இருக்கிறது. எங்களது உபயோகத்தில் இருந்தால் 4ம் பிரதிவாதியை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது. அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை வாங்க வேண்டும் என்றால் அரசாங்கத்திற்கு முறையிடலாம் என்றால் முறையிட்டேன். அவ்வாறு முறையிட்டு ஆட்சேபணை தெரிவித்து கடிதம் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. புறம்போக்கு சொத்தை அரசால் மறுத்தால் மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றும் அவ்வாறு மறுக்காதபட்சத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் எனது

நீண்டகால அனுபவத்தில் உள்ளது. நீண்டகால அனுபவத்தில் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்தில் பீ மெமோ மூலம் அனுபவித்து வருகிறேனா என்றால் அதற்கு எனக்கு அவசியம் இல்லை. கடந்த 50 வருடங்களுக்கு முன்பாக எனது அப்பா காலத்தில் விடுபட்டு போன இடம் ஆகும்.

நான் தாக்கல் செய்த ஆவணங்களில் ஜமாபந்தியில் 10 முதல் 17 ஆவணங்களில் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவிற்கு அரசாங்.கத்தின் மூலம் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்றால் பதில் கொடுப்பதாக சொன்னார்கள் அவர்களுக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால் கொடுக்கவில்லை. பிரதிவாதிக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால் பட்டா கொடுக்க மறுத்து வருவதாக பிராதில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அரசாங்க சொத்தை அபகரிக்க பட்டா கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறானது என்றால் சரியல்ல.

ஏற்கனவே அரசாங்கத்தால் எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அதை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது இடத்துக்கு அருகாமையில் இருப்பதால் அதை அடைய வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.08 19:02:42 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.